ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2177/3 - 2020 මැයි මස 26 වැනි අඟහරුවාදා - 2020.05.26

*2177/3 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*எல். டீ. பி. 8/2007* (II)

### *2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டம்*

*2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் உப பிரிவு (2) இன் (ஈ) மற்றும் (உ) ஆகிய பந்திகளுடன் சேர்த்து வாசிக்கப்பெறும் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த அமரவீர,**
*மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2019, திசெம்பர் 23.*

**ஒழுங்குவிதிகள்**

*1. இந்த ஒழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உபகரணங்களின் வலு செயல்திறன் நியமங்கள்* (LED *மின்குமிழ்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. ஆளெவரும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும் இதற்கான* I *ஆம் அட்டவணையில் பூரணமாக விபரிக்கப்பட்டதுமான இலங்கை நியமங்கள் எஸ்எல்எஸ்* (SLS) *1530:2016 இல் குறித்துரைக்கப்பட்ட வலு செயல்திறன் நியமங்களிற்கு ஒத்திசைவாக தவறுகின்ற ஏதேனும்* LED *விளக்குகள் இலங்கையில் இறக்குமதி செய்தலோ உற்பத்தி செய்தலோ ஆகாது.*


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இரண்டாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டதும் இதற்கான I ஆம் அட்டவணையில் பூரணமாக விபரிக்கப்பட்டதுமான நியமங்களிற்கு ஒத்திசைவாக ஏதேனும் (LED) விளக்குகளை இலங்கையினுள் உற்பத்தி செய்கின்ற அல்லது இறக்குமதி செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும் எஸ்எல்எஸ் (SLS) 1530:2016 இல் குறித்துரைக்கப்பட்டதும், இதற்கான II ஆம் அட்டவணையில் பூரணமாக விபரிக்கப்பட்டதுமான படிவத்திற்கும் பரிமாணங்களும் மற்றும் அளவுக்கு ஒத்திசைவதாகவும், எந்த உறையில், சுருளில் அல்லது பெட்டியில் உற்பத்திப் பொருள் அடங்கியுள்ளதோ அந்த உறைக்கு சுருளிற்கு அல்லது பெட்டிக்கு பொருத்தப்பட்டுள்ள சுட்டுத்துண்டை ஆகக்குறைந்த வலு செயற்பட்டு (எம்இபி) சுட்டுத்துண்டைக் கொண்டிருப்பதாகத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

4. இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் எஸ்எல்எஸ் (SLS) 1530:2016 ஆக குறித்துரைக்கப்பட்ட வலு செயற்திறன் நியமங்களுடன் ஒத்திசைவானது என உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக, அதிகார சபை விடையத்துக்கேற்றவாறு எவரேனும் இறக்குமதியாளரால் அல்லது உற்பத்தியாளரால் இறக்குமதி செய்யவிருக்கும் அல்லது உற்பத்தி செய்யப்படவிருக்கும் ஏதேனும் LED விளக்கு எஸ்எல்எஸ் (SLS) 1530:2016 இல் குறித்துரைக்கப்பட்ட இலங்கை நியமங்களுக்கு ஒத்திசைகின்றது என சான்றுப்படுத்துகின்ற இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு ஏதேனும் LED விளக்கின் அத்தகைய எவரேனும் இறக்குமதியாளரை அல்லது உற்பத்தியாளரை தேவைப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய சான்றிதழ் அதனில் உள்ளடக்கப்பட்ட நிகழ்வுகளை முகத்தோற்றளவில் எண்பிப்பதற்கான சான்றாக ஏற்கத்தக்கதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

5. ஆளெவரும் எந்த உறையில் அல்லது சுருளில் அல்லது பெட்டியில் உற்பத்திப் பொருள் அடங்கியுள்ளதோ அந்த உறைக்கு அல்லது சுருளிற்கு அல்லது பெட்டிக்குப் பொருத்தப்பட்ட இவ் ஒழுங்குவிதிகளின் 3 ஆம் ஒழுங்குவிதியினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவதற்குத் தவறுகின்ற வலு சுட்டுத்துண்டுடன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டதாயினும் சரி அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டதாயினும் சரி ஏதேனும் LED விளக்கை களஞ்சியப்படுத்தல், காட்சிப்படுத்தல், ஒன்றில் மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்தல், விற்பனைக்காக கொடைமுனைதல் அல்லது விநியோகித்தல் ஆகாது.

6. இவ் ஒழுங்குவிதிகளில்-

"சட்டம்" என்பது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"அதிகாரசபை" என்பது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை எனப் பொருள்படும் ; அத்துடன்

"இலங்கை கட்டளை நிறுவனம்" என்பது, 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளை நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை கட்டளைகள் நிறுவனம் எனப் பொருள்படும்.

## அட்டவணை I


(ஒழுங்குவிதிகள் 2, 3, 4)

SLS 1530:2016 எனக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு இலங்கை நியம 'நோக்கெல்லையின்' கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் LED மின்குமிழ்.


**அட்டவணை** II

*(ஒழுங்குவிதி 3)*


*உருப்படம் 1:* ஆகக்குறைந்த மின்சக்தி செயல் திறன் (MEP) முத்திரை





*உருப்படம் 4:* சக்தி முத்திரையின் எழுத்துக்களின் பருமன்



*உருப்படம் 5:* சுட்டுத்துண்டின் நிறங்கள்




*உருப்படம் 2.* சக்தி முத்திரையின் உண்மையாள அளவுப் பருமன்




*உருப்படம் 3.* சக்தி முத்திரையின் பரிமாணங்கள்

